முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1539

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.12.2023**, சனிக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரக்குடில் படைத்த தர்மமே
ஓங்கார மகா சூட்சுமங்களை
உலகமெல்லாம் அடைந்து ஓங்கார லோகமாக
2. ஆகவே மாற்றம் கண்டடைய
அற்புதம் நிகழ்த்துகின்ற குருஅரங்கனே
மிகைபட உந்தனுக்கு சக்தி கூட
மகான் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது தேள் திங்களில் உரைப்பேன்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 30 ம் நாள், 16.12.2023, சனிக்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல்பெருகி வர
வரமென உலகோர் நாடி இனிதே
வல்லமைதரும் சடாட்சர தீட்சை ஏற்று
4. ஏற்று அவரவரும் ஞானம் பயில
எங்கும் ஞானிகள் பேரில் தர்மம்
அளவிலா செய்துகொண்டு வருகவருக
அறிவிப்பேன் உலகில் மாற்றம் நிகழும்
5. நிகழுமப்பா ஞானவான்கள் என்கின்ற
நிலைத்தன்மை கொண்ட படைகள் மிகுதியாகி
காலமெங்கும் அரங்கனால் போற்றும்
கலியுகத்தில் சுத்த நெறி திளைத்து
6. திளைத்து ஞானிகளெல்லாம்
மனமகிழ்ந்து உலகோர்க்கு அருள
ஞானவான்கள் வழிகாட்ட இனிதே
மக்களெல்லாம் ஞானிகளாக

7. அரங்கனால் தேர்வு செய்யப்பட்டு
ஞானவான்கள் நிறைந்த பூமியாக
ஆகவே ஞான ஆட்சிக்காலம்
அரங்கன் நோக்கமாக வெற்றி கொள்ளும்
8. மிகைபட உலகோர் அன்னதனால்
முருகப்பெருமான் என் ஏழாம்படை வீடான
உலகை வெல்லும் ஓங்காரக்குடில் நோக்கி
உத்தமமாய் ஒன்றிணைந்து வரவர
9. இந்த அற்புதம் நடந்து உலகமெல்லாம்
ஞான லோகம் ஆகவும்
ஞான யுகமாற்றமாகவும் நடந்தேறக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—